# தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II

# மற்றும் கூடுதல் நிதி உதவித் திட்டம்

# மீள்குடியேற்ற செயல் திட்டம், 2020

**1.** 110 கி.மீ நீளமுள்ள ஏழு சாலைகளை உலக வங்கியின் கூடுதல் நிதியுதவியின் மூலம் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்மேம்பாடுகள் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளன. முதற்கட்டமாக, 33 கி.மீ நீளமுள்ள 3 சாலைகளும், மீதமுள்ள 77 கி.மீ நீளம் உடைய 4 சாலைகள் இரண்டாம் கட்டமாக மேம்படுத்தப்பட உள்ளன.

**2.** பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான ஒப்பந்த முறையின் கீழ், முதற்கட்டத்தில் பின்வரும் மூன்று சாலைகளை மேம்படுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும், இந்த மீள்குடியேற்ற செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- ஓமலூர் – மேச்சேரி மா.நெ 222 (1.150 கி.மீ முதல் 14.3 கி.மீ வரை) உள்ள இருவழிச்சாலை, பிரிக்கப்பட்ட நான்கு வழிச்சாலையாக அமைக்கப்படவுள்ளது. (Design Chainage 1.15 கி.மீ முதல் 14.320 கி.மீ வரை)
- மல்லியக்கரை – ஆத்துார் மா.நெ 30 (81.125 கி.மீ முதல் 91.2 கி.மீ வரை) உள்ள இருவழிச்சாலை, கடினத்தள புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலையாக அமைக்கப்படவுள்ளது. (Design Chainage 81.125 கி.மீ முதல் 91.009 கி.மீ வரை)
- சித்தோடு – ஈரோடு மா.நெ 15 (153.5 கி.மீ முதல் 161.625 கி.மீ வரை) உள்ள இருவழிச்சாலை, பிரிக்கப்பட்ட நான்கு வழிச்சாலையாக அமைக்கப்படவுள்ளது. (Design Chainage 153.6 கி.மீ முதல் 161.725 கி.மீ வரை)

**3.** மீள்குடியேற்ற செயல் திட்டத்தின் விவரிப்பு:–

i) கட்டாயமாக நிகழக் கூடிய மீள்குடியேற்ற பாதிப்பை ஏற்படுத்தும் திட்ட கூறுகள்;

ii) கட்டாய மீள்குடியேற்ற பாதிப்புகளை கண்டறிந்து தணிப்பது, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் II- ன் கொள்கையாகும்;

iii) அங்கீகரிக்கப்பட்ட மீள்குடியேற்றக் கொள்கை கட்டமைப்பிற்கு (RPF) ஏற்ப, பாதிப்பின் அளவு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது;

iv) கடுமையான பாதிப்புகளைத் தணிப்பதற்கும், மாற்று செலவில் உடனடி மற்றும் பயனுள்ள இழப்பீட்டை வழங்குவதற்கும் நிறுவன மற்றும் செயல்பாட்டு ஏற்பாடுகள் உதவுகின்றன;

v) ஆலோசனைகள் மற்றும் வெளிப்படுத்துதலுக்கான நடவடிக்கைகள்.

சில பிரிவுகளுக்கான கணக்கெடுப்புகள் மற்றும் மதிப்பீடுகள் நிறைவடையாததால், இந்த மீள்குடியேற்ற செயல்திட்டம் முழுமையாக முடிக்கப்படவில்லை. பாதிப்புகள் மற்றும் ஆய்வுகள்/ ஆலோசனைகளின் மதிப்பீடு முடிந்ததும் ஆகஸ்ட் 2020–க்குள் கூடுதல் சேர்க்கை தயாரிக்கப்படும்.

**4.**இந்த திட்டத்தில், 11.8361 ஹெக்டேர் தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்துதல் மற்றும் 1.2353 ஹெக்டேர் அரசுக்கு சொந்தமான நிலங்களை மாற்றுவது ஆகியவை அடங்கும். மேலும், 911 குடும்பங்கள் பாதிப்பிற்குள்ளாவர்கள். அவர்களில், 859 நில உரிமையாளர்கள், மீதமுள்ள 52 குடும்பங்கள் முறைசாரா குடியேறியவர்கள். மொத்தமுள்ள 859 நில உரிமையாளர்களில், 346 நில உரிமையாளர்களின் கட்டமைப்புகளும் பாதிப்பிற்குள்ளாகும். மீதமுள்ள உரிமையாளர்கள் நிலத்தை மட்டுமே இழக்க நேரிடும். பாதிக்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் விவசாயம் சாரா நிலங்கள் ஆகும்.

**5.**பாதிக்கப்பட்ட 911 குடும்பங்களில், 88 குடும்பங்கள் இடமாற்றம் அல்லது வாழ்வாதார ஆதரவு செய்யப்பட வேண்டிய கடுமையான பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும். மீதமுள்ள 823 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறைந்த அளவில் இருக்கும். மேலும், அவர்கள் தொடர்ந்து அதே இடத்தில் வசிக்கவோ அல்லது வணிகத்தை தொடரவோ முடியும். கடுமையாக பாதிக்கப்பட்ட 88 குடும்பங்களில் 53 நில உரிமையாளரின் குடும்பங்கள் (33 குடியிருப்பு இழப்பு, 18 வணிக இழப்பு மற்றும் 2 வணிக மற்றும் குடியிருப்பு இழப்பு), 21 குடியிருப்பு உரிமை இல்லாதவர்கள், ஒரு ஆக்கிரமிப்பாளர், 5 நடைபாதை ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் 8 வாடகைத்தாரர்கள் ஆகியோர் உள்ளனர். இரண்டு இடங்களில் கடுமையான பாதிப்புகளால் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் இடப்பெயர்வுக்கு ஆளாகின்றனர். இடம்பெயரவுள்ள 15 குடியிருப்பு உரிமையாளர்கள், மல்லியக்கரை – ஆத்தூர் சாலையின் தாண்டவராயபுரம் கிராமத்திலும், 21 பொது இட ஆக்கிரமிப்பாளர்கள் சித்தோடு – ஈரோடு சாலையில் உள்ள சூலை கிராமத்தில் வசிக்க உள்ளனர்.

**6.**மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது, இடம் பெயரவுள்ள குடியிருப்பு வாசிகளில் பெரும்பாலானவர்கள் இழப்பீடு, பிற உதவி, மாற்றிடம் மற்றும் பண ஆதரவு குறித்த கூடுதல் விவரங்கள் தெரிவிக்கப்படும்பொழுது, தங்களது முடிவுகளை (பணம் அல்லது கட்டப்பட்ட வீடு) தெரிவிப்பதாக கூறினர். நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவின் (LARRU) மேற்பார்வையில் மீள்குடியேற்றத் திட்ட ஆலோசகர், இடம்பெயரவுள்ள அனைத்து குடும்பங்களையும் கலந்தாலோசித்து, அவர்களின் விருப்பங்களை பதிவு செய்வார். மேலும் அவர்களின் விருப்பம் கட்டப்பட்ட வீடாக இருந்தால், இத்திட்டம் வாயிலாக மாற்றிடம் வழங்கப்படும். கடுமையாக பாதிக்கப்பட்ட குடியிருப்பின் குடும்பங்களை இடம் பெயர்வதற்கு முன்னரே கட்டுமான நடவடிக்கைகள் முடிக்கப்படுவதை, நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு உறுதி செய்யும். கணக்கெடுக்கப்பட்ட 36 குடும்பங்களில், 22 குடும்பங்கள் பாதிக்கப்படக் கூடியவை. அவற்றில் 18 குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களும், 4 குடும்பங்கள் பெண்கள் தலைமையில் நடைபெறும் குடும்பங்கள் ஆகும்.

**7.** தேசிய / மாநில சட்டங்கள் மற்றும் உலக வங்கியின் செயல்பாட்டுக் கொள்கை 4.12 ல் உள்ள கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் ஆகிய இரண்டிற்கும் பொருந்தக்கூடிய கொள்கைகள் மற்றும் விதிகளை விவரிக்கும் தனி மீள்குடியேற்றக் கொள்கை கட்டமைப்பின் அடிப்படையில் சமூக பொருளாதார ஆய்வுகள், கலந்தாய்வுகள், உரிமைகள் மற்றும் செயல்படுத்தும் ஏற்பாடுகள், மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆகியன செயல்படுத்தப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் மீள்குடியேற்ற செயல் திட்டம் தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம், 2001 – இன் விதிகளின் படி, நிலம் கையகப்படுத்தப்பட்டு, நியாயமான இழப்பீடு பெறும் உரிமை மற்றும் வெளிப்படையான நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம் (RFCTLARR ACT) 2013 – ன் அடிப்படையில் இழப்பீடு எவ்வளவு என்பது தீர்மானிக்கப்படும். இடமாற்றத்திற்குள்ளான வீடுகள், கட்டிடங்கள், மற்ற அசையா சொத்துகள் போன்றவற்றின் மதிப்பு அன்றைய தேதியில் உள்ள பொதுப்பணித்துறையின் தர விலை விகிதப் பட்டியலின் கீழ் (plinth area rate) (தேய்மானத்தை கணக்கில் கொள்ளாமல்) தீர்மானிக்கப்படும். கட்டுமான பொருட்கள் ஒவ்வொன்றும் தற்போதுள்ள சந்தை விகிதங்களின் அடிப்படையில் தேய்மானம் இல்லாமல் ஆண்டு தோறும் திருத்தப்படுகின்றன. மரங்களுக்கான இழப்பீடு அவற்றின் சந்தை மதிப்பின் அடிப்படையில் இருக்கும். நில உரிமையாளர்களின் உரிமை, பகிர்வு சிக்கல்கள், வழங்கப்பட்ட

இழப்பீட்டுத் தொகை தொடர்பான விவாதங்கள் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலரால் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு ஆணையத்திற்கு பரிந்துரைக்கப்படும்.

**8.**விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் போது பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் திட்ட சாலையில் இடம்பெறும் கிராமத்தில் உள்ள மற்ற பங்குதாரர்களுடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் திட்ட பயனாளிகளுடன் மூன்று பொது ஆலோசனைகள் (ஒவ்வொரு சாலையிலும் தலா ஒன்று) நடைபெற்றது. சுமார் 320 பேர் கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் 40 பெண்கள் பங்கேற்றனர்.

**9.** பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு கட்டங்களில் தகவல் தெரிவிக்கப்படும். இழப்பின் அளவு, விரிவான சொத்து மதிப்பீடு, உரிமைகள் மற்றும் சிறப்பு விதிகள், குறை தீர்க்கும் நடைமுறைகள், பணம் செலுத்தப்படும் நேரம், இடம்பெயர்வு அட்டவணை, பொதுப்பணிகள் அட்டவணை உள்ளிட்ட தகவல்கள் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவு மூலம் அரசு சாராஅமைப்பு / ஆலோசகரின் உதவியுடன் வெளியிடப்பட்டு, மீள்குடியேற்றத் திட்டத்தை செயல்படுத்தவும் உதவுகிறது. இது பொது ஆலோசனைகள் மூலம் செயல்பட்டு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிற்றேடு, துண்டு பிரசுரங்கள்அல்லது சிறு புத்தகங்களாக தமிழில் வழங்கப்படும். மீள்குடியேற்ற செயல்திட்டத்தின் நிர்வாக சுருக்கத்துடன் கூடிய உரிமை வழங்கல் அட்டவணை தமிழில் வெளியிடப்படும். மீள்குடியேற்ற செயல்திட்டத்தின் நிர்வாக சுருக்கத்துடன் கூடிய உரிமை வழங்கல் அட்டவணை, குறை தீர்க்கும் குழு ஆகியவை மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்படுவதன் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கிடைக்கும் வண்ணம் உள்ளது.

**10.**முதலாம் கட்ட சாலைகளுக்கான மீள்குடியேற்ற செயல்திட்டம் முதன்மை திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சேலம் பிரிவினால் மேற்கொள்ளப்படும். சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலகம் தலைமையிலான இத்திட்ட பிரிவு, மீள்குடியேற்ற அலுவலர் மற்றும் பிற ஊழியர்களின் உதவியுடன் இயங்குகின்றன. மீள்குடியேற்றத் திட்டத்தை அமல்படுத்துவதற்கான அலகுகளின் பொறுப்புகள் பின்வருமாறு: 1) நிலம் மற்றும் சொத்துக்களை கையகப்படுத்துதல்; 2) நிலம் மற்றும் சொத்துகளுக்கான இழப்பீடு வழங்குதல்; 3) மீள்குடியேற்ற தளங்களின் மேம்பாடு உள்ளிட்ட மீள்குடியேற்ற உதவிகளை வழங்குதல். சேலத்தில், நிலம் கையகப்படுத்துதல் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றப் பிரிவு தேவையான சக ஊழியர்களுடன் செயல்பட்டுவருகிறது. மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற வளர்ச்சித் திட்டங்களை அனுபவமிக்க அரசு சாரா நிறுவனங்கள்/ ஆலோசகர்களின் ஆதரவோடு செயல்படுத்தப்படும். மேலும் அவற்றை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்காக அனுபவமிக்க ஆலோசகர் நியமிக்கப்படுவார். பாதிக்கப்பட்ட நபரின் புகார்கள் மற்றும் குறைகளைத்

தீர்ப்பதற்கும், அவற்றை மதிப்பீடு செய்வதற்கும் வசதிகள் செய்வதற்கும் தற்போதுள்ள குறை தீர்க்கும் குழுவே பயன்படுத்தப்படும். ஓமலூர் – மேச்சேரி சாலை சீரமைப்பில் 1.5 கி.மீ தூரத்தில் உள்ள ஒரு சிறிய பகுதிக்கு மூன்று விருப்பங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இறுதி விருப்பம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இந்த பகுதியில் உள்ள மீள்குடியேற்ற செயல் திட்டத்திற்காக கூடுதல் சேர்க்கை தயாரிக்கப்படும். இறுதி சீரமைப்புக்கு ரயில்வே ஒப்புதல் தேவைப்படுவதால், இதன் கட்டுமான பணிகள் தனித்தனியாக மேற்கொள்ளப்படும். கூடுதலாக, 800 மீ ஈரோடு – சித்தோடு சாலையின் கணக்கெடுப்புகள் மற்றும் ஆலோசனைகள் தற்போதைய கொரோனா வைரஸ் நோய் – 19 காரணமாக தாமதமானதால், இந்த இறுதி மீள்குடியேற்ற செயல்திட்டத்தில் பிற்சேர்க்கையாக இணைக்கப்படும்.

**11.** நிலம் மற்றும் சொத்துகளுக்கான இழப்பீடுகளை வழங்க மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உதவிகள் உள்ளிட்ட மீள்குடியேற்ற திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ. 614.14 மில்லியன் வரவு செலவு மதிப்பு இத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற திட்டத்தை செயல்படுத்தும்போது ஒரு அலகு மதிப்பானது, நடப்பு ஆண்டு விலையை (2020–2021) அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும். கூடுதல் நிதியுதவி தேவைப்படும் போது தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்படும். நிலம் மற்றும் சொத்துக்களை கையகப்படுத்துவதற்கு முன், நிலம் மற்றும் கட்டுமானத்திற்கு தகுதியான இழப்பீடு, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற உதவித்தொகை ஆகியவை வழங்கப்படும். மேலும் இந்த நிலத்தை ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைப்பதற்கு முன் கோட்டப் பொறியாளரால் சான்றளிக்கப்படும். எவ்வாறாயினும், எந்தவொரு நீண்டகால மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளாக திறன் மேம்பாட்டு பயிற்சி நீண்டகாலத்திற்கு தொடரும்.

**12.** மீள்குடியேற்ற செயல் திட்டத்தின் செயல்திறனை கண்காணிக்க இத்திட்டத்தில் தொடர்பில்லாத வேறொரு ஆலோசகர் ஈடுபடுவார். இது அந்தந்த மண்டல அலகுகளால் கூடுதலாக கண்காணிக்கப்படும். திட்டத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதற்கும், அவர்களின் இழப்பீடு மற்றும் உதவியைப் பெறுவதற்கும், வாழ்வாதார ஆதரவுக்கான தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும், பொருத்தமான நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் திட்ட அமலாக்க அலகுக்கு ஆதரவளிக்கவும் திட்ட அமலாக்க பிரிவு, அரசு சாரா நிறுவனங்களை ஈடுபடுத்தும்.

<u>பாதிப்புகளுக்கான இழப்பீடு அட்டவணை</u>

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| பிரிவு– 1 உடைமையாளர்கள் – தனியார் உடைமை பாதிப்பு | | | | |
| 1 | **நில இழப்பு (விவசாயம்/குடியிருப்பு/ வணிகம்/இதர வகைகள்)** | அ | நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை சட்டம், 2013 இன் கீழ் இழப்பீடு கொடுத்து நிலம் கையகப்படுத்தப்படும்.<br><br>**(அல்லது)**<br><br>தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டத்தின்படி நில எடுப்பிற்காக நிர்ணயிக்கப்படும் தொகையைவிட 25% கூடுதல் தொகை வழங்கப்பட்டு, நில உரிமையாளரின் ஒப்புதலுடன் நிலம் கையப்படுத்தப்படும். (நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை சட்டம், 2013இன்படி நிலம் கையப்படுத்தலுக்கான இழப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது) | தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, இன்கீழ் அதிகாரியால் நில எடுப்பு செய்யப்படும்<br><br>**i.**இந்திய பத்திரப் பதிவு சட்டம் 1899 இன் கீழ் நில விற்பனை அல்லது நில விற்பனை ஒப்பந்தம் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ள சந்தை மதிப்பு (வழிகாட்டி மதிப்பு )<br><br>(அல்லது)<br><br>**ii.**அதே பகுதியிலோ அதற்கு அருகில் உள்ள பகுதியிலோ, அதே வகை நிலத்திற்கு கடந்த மூன்று வருடங்களில் பதிவு செய்யப்பட்ட கிரையங்களில் / கிரைய ஒப்பந்தப் பத்திரங்களில் அதிக விற்பனை விலைகளில் பதிவு செய்யபட்ட 50 சதவிதம் சாரசரி விற்பனை மதிப்பு.<br><br>இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் நில மதிப்பினை, தமிழக அரசு அறிவித்துள்ள ஊரகப்பகுதி சந்தை மதிப்பிற்கான பெருக்கு காரணி (multiplying factor) உடன் |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | | கணக்கிடப்பட்டு, அத்தொகைக்கு 100% ஆறுதல் தொகையும் 15(2) அறிவிப்பு வெளிவந்த தேதியிலிருந்து 12 சதவிகித கூடுதல் சந்தை மதிப்பு வழங்கப்படும்.<br><br>பாதிக்கப்பட்ட நிலத்தின் உரிமையாளர் விருப்பம் இருந்தால், உபயோகப்படுத்த முடியாமல் இருக்கும் மீதமுள்ள நிலத்தையும் கையகப்படுத்துமாறு கோர வாய்ப்பு அளிக்கப்படும். |
| | | ஆ | **விவசாய நில உரிமையாளர்கள்**<br>கையகப்படுத்தப்படும் நிலமானது, நிலத்தை இழந்தவருக்கு முதன்மை வருமான ஆதாரமாக இருந்து, நில எடுப்பினால் வாழ்வாதாரத்தை இழந்தவருக்கு வருடாந்திர உதவித் தொகைக்கு பதிலாக ஒரே தவணையாக ரூ.5,82,020/– வழங்கப்படும். | பாதிப்புக்குள்ளாகும் குடும்பத்திற்கு நில எடுப்பிற்கு உட்படும் நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் மட்டுமே முதன்மை வருமானமாக இருந்தால் குடும்பத்தின் (கையகப்படுத்தும் நிலத்தால் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தில் 1/3 பங்கு இழப்பு ஏற்பட்டால்) அந்த நில எடுப்பானது வாழ்வாதார இழப்பாகக் கருதப்படும். |
| 2 | குடியிருப்புகள் இழப்பு | | **வரிசை எண்: 1 (அ) ல் உள்ள பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள நில இழப்பீடுத் தொகையுடன் கீழ்கண்ட நிவாரணங்களும் வழங்கப்படும் .** | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | அ | தேய்மானத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் கட்டுமானங்களுக்கு பொதுப் பணித்துறையின் அன்றைய தேதியிலான “விலை நிர்ணய அட்டவணைப்படி ரொக்க இழப்பீடும் 100% ஆறுதல் தொகையும் வழங்கப்படும். | கட்டிடத்தின் ஒரு பகுதி பாதிப்படைந்திருந்து, எஞ்சியுள்ள பகுதியை பயன்படுத்த முடியாது என்ற நிலையில் இருந்தால், ஒட்டு மொத்த கட்டுமானத்திற்கும் இழப்பீடு கோர உரிமை உண்டு. ( * ) |
| | | ஆ | கட்டுமான இடிபொருள்களை எடுத்துச் செல்ல உரிமை உண்டு. | |
| | | இ | மாட்டுக் கொட்டகையை இழப்பவர்களுக்கு ஒரு முறை உதவித்தொகையாக ரூ. 34,980/– நிதியுதவி வழங்கப்படும். | |
| | | ஈ | இத்திட்டத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர நேரிடும் சுயதொழில் புரிபவர்கள் அல்லது கைவினைஞர்களின் குடும்பத்திற்கு ஒரு முறை உதவித்தொகையாக ரூ. 34,980/– நிதியுதவி வழங்கப்படும். | |
| | | உ | இடம் பெயர்க்கப்பட்டவர்களுக்கு கிராமப்புறமாக இருந்தால் மத்திய அரசின்–PMAY வரையறையின் படியான வீடு அல்லது நகர்ப்புறமாக இருந்தால் 50 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட வீடு /அடுக்கு மாடி குடியிருப்பில் வீடு அல்லது விரும்பினால் வீட்டிற்கு பதிலாக ரொக்கத் தொகை வழங்கப்படும். வீட்டிற்குப் பதில் ரொக்கம் பெற விரும்புவோர்க்கு மத்திய அரசு | புதிய வீட்டு மனைகள் அல்லது வீடுகளைப் பொறுத்தமட்டில் முத்திரைத்தாள் கட்டணமும் பதிவுக் கட்டணமும் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.<br><br>அவ்வீட்டு இல்லத்தரசி அல்லது அக்குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பெயரில் மட்டுமே பட்டா அளிக்கப்படும். |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | அளவுகோளின்படி கிராமப்பகுதியாக இருந்தால் ரூ.1,70,000/- மும் [PMAY(G)] நகர்புறமாக இருந்தால் ரூ.2,10,000/-மும் [PMAY(U)] வழங்கப்படும். | மறு குடியமர்த்தப்படும் இடங்களில் நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை சட்டத்திற்கு ஏற்ப அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் அளிக்கப்படும்.<br><br>மக்கள் தாங்கள் தற்போதிருக்கும் இடத்திலிருந்து தாங்களாகவே இடமாற்றம் செய்துகொள்ள அவர்களுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்படும். |
| | | <u>**ஊ**</u> | திட்டத்தினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர வேண்டிய குடும்பத்திற்கு ஒரு முறை உதவித்தொகையாக பிழைப்பூதியமாக ரூ.**50,370/–** வழங்கப்படும். | |
| | | **எ** | திட்டத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர வேண்டிய குடும்பத்திற்கு இடம்பெயர உதவித்தொகை (shifting Allowance) ரூ.69,950/- வழங்கப்படும். | |
| | | **ஏ** | இடம்பெயர வேண்டிய பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.69,950/- ஒரு முறை உதவித்தொகையாக மறு குடியமர்வு உதவித்தொகை வழங்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | ஐ | கையகப்படுத்தப்பட்ட குடியிருப்பு இடத்தின் உரிமையாளருக்கு, இதன்மூலம் கிடைக்கும் வாடகை வருமானம்தான் முதன்மையான வருமான ஆதாரமாக இருந்து, இந்த கையகப்படுத்துதல் மூலம் அவர்களுடைய வாழ்வாதாரம் பதிக்கப்படும் நிலையில், வருடாந்திர உதவிதொகைக்குப் பதிலாக, அவர்களுக்கு, ஒரே தவணையாக ரூ.5,82,020/– வழங்கப்படும். | எந்தவொரு பாதிக்கப்பட்ட குடும்பமும், தங்களது வாழ்வாதாரமாக, (கையகப்படுத்தும் குடியிருப்பு நிலத்தால் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தில் 1/3 பங்கு இழப்பு ஏற்பட்டால்) கையகப்படுத்தப்படும் குடியிருப்பு கட்டுமானத்திலிருந்து கிடைக்கும் வாடகை வருமானத்தையே முதன்னமயான ஆதாரமாக நம்பியிருந்தால், அது வாழ்வாதார இழப்பாகக் கருதப்படும். |
| 3 | **வணிகக்கட்டுமானங்கள் இழப்பு** | <br><br><br><br><br>அ. | **மேலே கண்ட வரிசை எண் 1 (அ)– ல் கூறப்பட்டுள்ள நிலத்திற்கான இழப்பீட்டுடன் கீழ்கண்ட நிவாரணங்களும் வழங்கப்படும்.**<br><br>பொதுப்பணித் துறையின் அன்றைய தேதியிலான “விலை நிர்ணய அட்டவணை” ப்படி தேய்மானத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் 100% ஆறுதல் தொகை ரொக்க இழப்பீடாக வழங்கப்படும். | கட்டிடத்தின் ஒரு பகுதி பாதிப்படைந்திருந்து, எஞ்சியுள்ள பகுதியை பயன்படுத்த முடியாது என்ற நிலையில் இருந்தால், ஒட்டு மொத்த கட்டுமானத்திற்கும் இழப்பீடு கோர உரிமை உண்டு. (*) |
| | | ஆ | கட்டுமான இடிபொருள்களை எடுத்து செல்லும் உரிமை உண்டு. | |
| | | இ | வணிக இழப்பீடு / சுய வணிகம் பாதிக்கப்பட்டவர்க்கு ஒரு முறை உதவித்தொகையாக ரூ.34,980/- வழங்கப்படும். | கட்டுமான உடைமையாளரும் வணிக உடைமையாளரும் வெவ்வேறாக இருந்தால் இந்த வணிக இழப்பீடு / சுய வணிக இழப்பீடு மான்யம் வணிக |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | | உடைமையாளருக்கு வழங்கப்படும் |
| | | ஈ | திட்டத்தினால் பாதிக்கப்பட்டு வணிக இடமாற்றம் செய்ய வேண்டிய குடும்பத்திற்கு ஒரு முறை உதவித்தொகையாக பிழைப்பூதியமாக ரூ.50,370/- வழங்கப்படும். | |
| | | உ | திட்டத்தினால் பாதிக்கப்பட்டு வணிக இடமாற்றம் செய்ய வேண்டிய குடும்பத்திற்கு இடம் பெயர உதவித் தொகை (shifting Allowance) ரூ.69,950/- வழங்கப்படும். | |
| | | ஊ | வணிக இடமாற்றம் செய்ய வேண்டிய பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.69,950/- ஒரு முறை உதவித்தொகையாக ‘‘மறு குடியமர்வு உதவித்தொகை’’ வழங்கப்படும். | |
| | | எ | கையகப்படுத்தப்பட்ட வணிக கட்டுமான உரிமையாளருக்கு, இதன்மூலம் கிடைக்கும் வணிக வருமானம் அல்லது வாடகை வருமானம்தான் முதன்மையான வருமான ஆதாரமாக இருந்து, இந்த கையகப்படுத்துதல் மூலம் அவர்களுடைய வாழ்வாதாரம் பதிக்கப்படும் நிலையில், வருடாந்திர உதவிதொகைக்குப் பதிலாக, அவர்களுக்கு, ஒரே தவணையாக ரூ.5,82,020/– வழங்கப்படும். | எந்தவொரு பாதிக்கப்பட்ட குடும்பமும், தங்களது வாழ்வாதாரமாக, (கையகப்படுத்தும் வணிக கட்டுமானத்தால் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தில் 1/3 பங்கு இழப்பு ஏற்பட்டால்) கையகப்படுத்தப்படும் வணிக கட்டுமானத்திலிருந்து கிடைக்கும் வணிக அல்லது வாடகை வருமானத்தையே முதன்மையான ஆதாரமாக நம்பியிருந்தால், அது வாழ்வாதார |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | | இழப்பாகக் கருதப்படும். |
| 4 | **வாடகைக்கு இருப்போருக்கு ஏற்படும் இழப்பு (குடியிருப்பு/வணிகம்/விவசாயம் )** | **ஆ** | **4.1 குடியிருப்பு**<br>வாடகை குடியிருப்பை விட்டு வெளியேற போதிய காலம் அவகாசம் கொடுத்து முன் அறிவிப்பு செய்யப்படும். | |
| | | **ஆ** | கிராமப்புறமாக இருந்தால் ஒரு மாதத்திற்கு ரூ.4,200/- வீதம் நகர்புறமாக இருந்தால் ரூ.5,600/- வீதம் ஆறு மாதங்களுக்கு வாடகைப் படியாக (Rental Allowance) வழங்கப்படும். | |
| | | **இ** | இடம்பெயர்வதற்கு உதவித்தொகையாக ரூ.13,990/- வழங்கப்படும். | |
| | | **ஆ** | **4.2 வணிகம்**<br>வாடகைக் கடையை விட்டு வெளியேற ஒருமாத காலம் அவகாசம் கொடுத்து முன் அறிவிப்பு செய்யப்படும். | |
| | | **ஆ** | கிராமப்புறமாக இருந்தால் ஒரு மாதத்திற்கு ரூ.5,600/- வீதம் நகர்புறமாக இருந்தால்ரூ.8,390/- வீதம் ஆறு மாதங்களுக்கு வாடகைப் படியாக (Rental Allowance) வழங்கப்படும். | |
| | | **இ** | இடம் பெயர்பவர்களுக்கு உதவித்தொகை ரூ.13,990/- வழங்கப்படும். | |
| | | **ஈ** | கட்டிட உரிமையாளர்களுக்கு பதிலாக வாடகைக்கு இருக்கும் வணிகதாரருக்கு, வணிக | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | இழப்பீட்டிற்காக/சுய வணிக இழப்பீட்டிற்காக மேலே **3(இ)**ல் கூறப்பட்டுள்ளவாறு ஒரே தவணை மான்யம் ரூ.34,980/- வழங்கப்படும். | |
| | | **அ** | **4.3 விவசாய குத்தகைதாரர்கள்:**<br>விவசாய குத்தகைதாரர்களைப் பொறுத்தமட்டில் பயிர்களை அறுவடை செய்து கொள்ள, முன் அறிவிப்பு கொடுக்கப்படும். அல்லது சந்தை மதிப்பின் அடிப்படையில் விவசாயத்துறை நிர்ணயம் செய்யும் பயிர் இழப்பீடு வழங்கப்படும். | |
| 5 | **மரங்கள், பயிர்கள், பல்லாண்டு பயிர்கள் மற்றும் மற்ற சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்** | **அ** | பயிர்களை அறுவடை செய்துகொள்ள 90 நாட்கள் அவகாசம் கொடுத்து முன் அறிவிப்பு கொடுக்கப்படும்.<br>(அல்லது)<br>இழப்பீட்டிற்கு உள்ளான பயிரின் மகசூல் அடிப்படையில் வேளாண்மைத்துறை அளிக்கும் மதிப்பீட்டின் படி சந்தை மதிப்பிற்கு நிகரான ஒட்டுமொத்த தொகை வழங்கப்படும். | |
| | | **ஆ** | வனத்துறை நிர்ணயிக்கும் சந்தை மதிப்பின்படி மரங்களுக்கும், மற்ற பல்லாண்டு பயிர்களுக்கு, தோட்டக்கலைத்துறை நிர்ணயம் செய்யும் மதிப்பின்படியான தொகையுடன் 100 சதவிகித ஆறுதல் தொகையும் சேர்த்து இழப்பீடு வழங்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | இ | பாசனத்திற்குரிய கிணறுகள் இழப்பு, பொதுப்பணித்துறையின் அன்றைய தேதியிலான “விலை நிர்ணய அட்டவணை” ப்படி (Schedule of Rates) இழப்பீடும் 100 சதவிகித ஆறுதல் தொகையும் வழங்கப்படும். | |
| **பிரிவு –2 மகளிருக்கான கூடுதல் உதவி (சட்டப்படியான உரிமை உள்ளவர்கள் / உரிமை இல்லாதவர்கள் )** | | | | |
| 6 | **நிலம்/குடியிருப்பு/வணிகம்– இழப்பு** | அ | நில இழப்பீட்டு உதவித்தொகை இதர மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உதவித்தொகையைக் கொண்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து 3 ஆண்டு காலத்திற்குள் பெண்களின் பெயரில் வாங்கப்படும் சொத்திற்கு முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்திற்கான செலவு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும். | |
| **பிரிவு–3 சட்டப்படி உரிமை இல்லாதவர்கள் (பொது இடத்தை ஆக்கிரமித்தவர்கள் )/தனது சொந்த இடத்திற்கு அருகில் உள்ள இடத்தை ஆக்கிரமித்தவர்கள்.** | | | | |
| 7 | **பொது இடத்தை ஆக்கிரமித்துள்ளவர்களின் இழப்பு (squatters)** | அ | **7.1 குடியிருப்பு இழப்பு:** பொதுப் பணித்துறையின் அன்றைய தேதியிலான “விலை நிர்ணய அட்டவணை”ப்படி தேய்மானத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் கட்டுமானத்திற்கு இழப்பீடு கொடுக்கப்படும். | |
| | | ஆ | இடிபொருள்களை எடுத்துச் செல்லும் உரிமை அளிக்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | இ | இடம் பெயர்பவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு உதவித் தொகையாக ரூ, 97,930/– வழங்கப்படும். குடியிருப்பு நிலம் இல்லாதவர்களுக்கு, கூடுதல் உதவியாக ரூ.96,950/– வழங்கப்படும். | பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒரு குழுவாக இணைந்து தாங்களாகவே இடமாற்றம் செய்துகொண்டாலோ அல்லது திட்ட உதவியுடன் இடமாற்றம் செய்தாலோ, திட்டத்தின் மூலம், அவர்களுக்கான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் மறு குடியமர்வு இடத்தில் செய்து தரப்படும் |
| | | ஈ | ஒருமுறை பிழைப்பூதியமாக ரூ.25,180/- வழங்கப்படும். | |
| | | உ | இடம்பெயர உதவித்தொகையாக ரூ.13,990/-வழங்கப்படும். | தங்கள் சொந்த இடத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்படும் போது அவர்களுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்படும். |
| | | அ | **7.2 கடை இழப்பீடு:**<br>பொதுப்பணித்துறையின் அன்றைய தேதியிலான ‘‘விலை நிர்ணய அட்டவணை’’ப்படி தேய்மானம் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் கட்டுமானத்திற்கு இழப்பீடு கொடுக்கப்படும். | |
| | | ஆ | இடிபொருள்களை எடுத்துக் கொள்ளும் உரிமை அளிக்கப்படும். | |
| | | இ | பாதிக்கப்பட்ட கடையின் மறுகட்டுமானத்திற்கு ஒரே முறை மறுவாழ்வு உதவித்தொகையாக ரூ.27,980/- வழங்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | ஈ | பிழைப்பூதியமாக ரூ.25,180/- வழங்கப்படும். | |
| | | உ. | இடம்பெயர,உதவித்தொகையாக ரூ.13,990/-வழங்கப்படும். | |
| | | ஊ | **சாலையோர தற்காலிக சிறு பெட்டிகடைகளுக்கான (Kiosk) தாக்கம்:** சாலையோர தற்காலிக சிறு பெட்டி கடை பாதிக்கப்பட்டு இடம் பெயர வேண்டியதாக இருந்தால் அவர்களுக்கு மறுவாழ்வு உதவித்தொகை ரூ.20,950/- ஒரு முறை வழங்கப்படும். | |
| | | அ | **7.3 விவசாயம்:** பயிர்களை அறுவடை செய்ய இரு மாதங்களுக்கு முன் அறிவிப்பு அல்லது பயிருக்கு உள்ள சந்தை மதிப்பின்படி இழப்பீடு வழங்கப்படும். | |
| 8 | **தனது சொந்த இடத்திற்கு அருகில் உள்ள இடத்தை ஆக்கிரமித்துள்ளவர்களின் (Encroachers) இழப்பு** | அ | **8.1 விவசாயம்** பயிர்களை அறுவடை செய்து கொள்ள இரு மாதங்களுக்கு முன் அறிவிப்பு அல்லது முன் அறிவிப்பு கொடுக்காவிட்டால் சந்தை மதிப்பின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும். | பயிர்களின் சந்தை மதிப்பின்படி இழப்பீட்டை தனி மாவட்ட வருவாய் அலுவலரும், வேளாண்மை (அல்லது) தோட்டக்கலைத்துறையும் கலந்தாலோசித்து முடிவு செய்வார்கள். |
| | | அ | **8.2 கட்டுமானம்** ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டுமானத்தை இடிக்க ஒரு மாத கால அவகாசத்துடன் முன் அறிவிப்பு கொடுக்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | ஆ | பொதுப் பணித்துறையின் அன்றைய தேதியிலான ‘‘விலை நிர்ணைய அட்டவணை’’படி தேய்மானம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் கட்டுமானத்திற்கு இழப்பீடு கொடுக்கப்படும். | |
| **பிரிவு–4 வாழ்வாதார வாய்ப்புகள் இழப்பு** | | | | |
| 9 | **விவசாயம் சாராத் தொழிலாளர்களின் வேலை இழப்பு (அல்லது) விவசாய தினக்கூலி இழப்பு (அல்லது) மற்ற கூலி ஆட்கள் வேலை இழப்பு** | அ | விவசாய கூலிக்கு இணையான பிழைப்பூதியம் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும். | முழு நேர விவசாயத் தொழிலாளர்களாக இருப்பவர்கள்/ நில உடைமையாளரிடம் நிரந்தர வேலைவாய்ப்பில் உள்ளவர்கள்அல்லது வணிக நிறுவனங்களில் முழுநேர வேலைவாய்ப்பில் உள்ளவர்கள் மட்டுமே இந்த உதவித்தொகையை பெற முடியும். பருவகால விவசாயத் தொழிலாளர்கள் இந்த உதவிகளைப் பெற முடியாது. |
| 10 | **பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வாழ்வாதார ஆதரவு** | அ | பாதிக்கப்பட்ட அனைவருக்கும், அரசாங்க சமூக பாதுகாப்பு திட்டங்களிலும் நடைமுறையில் உள்ள வேலைவாய்ப்பு திட்டங்களிலும் இணைப்பதற்கு தேவையான குடும்பத்தில் உள்ள அனைத்து வயது வந்து உறுப்பினர்களுக்கும் கிடைக்க வழிவகை செய்யப்படும். | மறு குடியமர்வு செயல் திட்டத்தை அமலாக்க நியமிக்கப்பட்ட அரசு சாரா அமைப்பு, தேவைகளை மதிப்பீடு செய்து, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். |
| **பிரிவு–5 ஊறுபடக்கூடிய வகையினர் (Vulnerable)** | | | | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| 11 | **ஊறுபடக்கூடிய நிலையில் உள்ள குடும்பங்கள்** | அ | திறன் மேலாண்மை (skill development) பயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சியானது பயிற்சிக்கான கட்டணம், பயணம் வழிச்செலவு மற்றும் உணவுக்கான நிதியுதவிகள் அனைத்தும் உள்ளடக்கிய உதவியாக இந்த உதவி இருக்கும். | வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள வயதுக்கு வந்தவர்கள் அனைவரும் ‘‘இந்த திறன் மேலாண்மை’’ பயிற்சிக்கு தகுதியானவர்கள் ஆவார்கள்.<br><br>இடம் பெயர்க்கப்பட்டோரை அடையாளம் காண மேற்கொள்ளப்பட்ட 100 சதவிகித மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தகுதியான மற்றும் பாதிக்கப்படும் இடம் பெயர்க்கப்பட்டோரை நில எடுப்பு அலகு, திட்டச் செயலாக்கப் பணியில் உதவி புரியும் அரசுசாரா நிறுவனங்களின் உதவியுடன் கலந்து ஆலோசித்து அவர்களது திறமைக்கும், அவர்கள் வசிக்கும் பகுதிக்கும் ஏற்ற பயிற்சிகள் வழங்கப்படும். திட்ட செயலாக்கப்பணியில் உதவி புரியும் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் பொருத்தமான பயிற்றுனர்களை ‘‘நில எடுப்பு அலகு’’ அடையாளம் காணும். |
| | | ஆ | அதிகமாக பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு முறை உதவித்தொகையாக ரூ.7000/– வழங்கப்படும். | |
| | | இ | இடம் பெயர்க்கப்பட்ட ஊறுபடக்கூடிய குடும்பங்களில், அரசின் நலத்திட்டங்களைப் பெறத் தகுதி உடையவர்கள் என்று கண்டறியப்பட்டால், இதுவரை அவர்கள் அத்திட்டத்தின் மூலம் உதவி பெறவில்லை என்றால் அந்நலத்திட்டத்தில் இணைக்கப்படுவார்கள். | |
| **பிரிவு–6 பொருந்தக்கூடிய கொள்கையில் மாற்றம் காரணமாக நிலைத்தன்மைக்கான கூடுதல் ஏற்பாடு** | | | | |
| 12 | **நில உரிமையாளர்கள்** | அ | 24.01.2019–க்கு பிறகு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு பெருக்கல் காரணியில் உள்ள 12 | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | சதவிகித கூடுதல் சந்தை மதிப்பு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வின் கீழ் சிறப்பு மானியமாக வழங்கப்படும். | |
| **பிரிவு–7 எதிர்பாராத பாதிப்புகள்** | | | | |
| இத்திட்ட செயலாக்கத்தின் போது எதிர்பாராத பாதிப்புகள் ஏற்பட்டால் அவை இந்த ‘‘மறு குடியமர்வு செயலாக்க கொள்கை’’ அடிப்படையில் தீர்வு காணப்படும். | | | | |
| ( * ) நில எடுப்புக்குள்ளான கட்டிடத்தின், பாதிக்கப்படாத பகுதி, பாதுகாப்பில்லாத அல்லது உபயோகப்படுத்த/ வசிக்க இயலாத அல்லது சாலையிருந்து போதுமான இடைவெளி இல்லாமல் இருந்தால் மட்டுமே பாதிக்கப்படாத கட்டிடம் உட்பட மொத்த கட்டிடத்திற்கும் இழப்பீடு கோர இயலும். அவ்வாறு கோரிய வண்ணம் இழப்பீடு வழங்கப்படும் பட்சத்தில், . இழப்பீடு பெற்ற 30 நாட்களுக்குள் மொத்த கட்டிடத்தையும் / கட்டுமானத்தையும் இடித்துவிடுகிறேன் என்ற உறுதிமொழியினை (உறுதிமொழிப் பத்திரம் மூலம்). பாதிக்கப்பட்ட கட்டிட உரிமையாளரின் கோரிக்கை, முகாந்திரம் இல்லாததாக இருந்தால் அந்த கோரிக்கையை நிராகரிக்கும் உரிமை கோட்டப் பொறியாளருக்கு உண்டு. | | | | |

## குறை தீர்க்கும் குழு

1. மண்டல அளவில், நான்கு நபர்களைக் கொண்ட குறை தீர்க்கும் குழு, ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் (அல்லது) அவரது பதவிக்கு இணையான ஒருவர் தலைமையிலும் சம்மந்தப்பட்ட தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கோட்டப் பொறியாளர் குழுவின் உறுப்பினர் செயலராகவும் கொண்டு, சம்மந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர் ஒரு உறுப்பினராகவும் மற்றும் மாவட்ட ஆட்சியரால் நியமிக்கபட்ட, அப்பகுதியின் சமுதாயத்தில் மரியாதையும் மதிப்பும் மிக்க ஒருவர் மற்றொரு உறுப்பினராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. உள்ளூர் உறுப்பினர் மக்களின் குறைகளை அறிந்தவர் என்பதால், திட்டத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் நலன்களைப் பாதுகாப்பார். இந்த குழு முதன்மை திட்டத்தில் சிறப்பாக செயல்பட்டதால், கூடுதல் நிதியுதவி திட்டத்திலும் தொடரவுள்ளது.

2. குறை தீர்க்கும் குழு 3 வாரங்களுக்கு ஒரு முறை அல்லது அதற்கு மேற்பட்ட முறை சந்தித்து குறைகளை மதிப்பாய்வு செய்யும். புகார்களை அளித்தவர்கள் மற்றும் செயல்படுத்தும் பிரிவுகள் கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள். இக்குழு மனு பெறப்பட்ட தேதி, விசாரணை தேதி மற்றும் குழுவால் பரிசீலிக்கப்பட்ட தேதியுடன் புகாரின் விவரங்கள் மற்றும் தன்மை, எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல் தொடர்பு தேதி, ஆகியவற்றுடன் பெறப்பட்ட அனைத்து மனுக்களின் பதிவையும் பராமரிக்கும். குறைகளை எழுத்து வடிவத்திலோ அல்லது மின்னனு வடிவத்திலோ சமர்ப்பிக்கலாம். மற்றும் அரசு சாரா அமைப்பை சேர்ந்தவர்கள் திட்டத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் குறைகளை தாக்கல் செய்ய உதவுவார்கள். புகார் அளித்தவர்களின் குறைகள் மூன்று வார காலத்திற்குள் தீர்க்கப்படும் மற்றும் மனுதாரர்களுக்கு எழுத்துப்பூர்வ தகவல் அனுப்பப்படும். மனுதாரர் முடிவில் திருப்தி அடையவில்லை என்றால், அவர்கள் மேல்முறையீட்டுக் குழுவிடம் முறையிடலாம். மேல் முறையீட்டுக் குழுவின் தலைவராக திட்ட இயக்குநர் இருப்பார். மேலும் அக்குழுவின் உறுப்பினர்களாக, திட்ட கண்காணிப்பு பிரிவில் உள்ள கண்காணிப்பு பொறியாளர் மற்றும் சமூக அதிகாரி ஆகியோர் இருப்பார்கள். மனுதாரர்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் வாராந்திர மற்றும் பிற கூட்டங்களில், மேல் முறையீடு செய்வதற்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**3. அரசுசாராஅமைப்பின் பங்கு:–**

மண்டல அளவில் நில கையகப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவுகளுக்கு துணைபுரியும் அரசு சாரா அமைப்பு, திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் குறைகளை கேட்டு பதிவு செய்வதில் உதவுகிறது. திட்டத்தால் பாதிக்கப்பட்ட

நபர்களுக்கு குழுக்களிடம் தங்கள் குறைகளைத் தாக்கல் செய்வதற்கும் அவற்றை பின்பற்று வதற்கும் உதவுவதே அரசு சாரா நிறுவனசேவைகளின் நோக்கமாகும்.